செ.வெ.எண்: 30 நாள்: 10.02.2017

**விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ரூ.54.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், தேராவூர் மற்றும் நம்பம்பட்டி ஆகிய கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் தலா ரூ.14.55 இலட்சம் என மொத்தம் ரூ.29.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கிராம சேவை மைய கட்டிடங்கள், இராஜாளிப்பட்டி ஊராட்சி, பாட்னாம்பட்டியில் தொகுக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானிய திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக்கூடம் கட்டிடம் என மொத்தம் ரூ.54.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்வேறு கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கிராம சேவை மைய கட்டிடங்கள் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான சாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், ஆதரவற்ற விதவை சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை தங்களது இருப்பிடங்களிலேயே பெற்று பயன்பெறலாம். இதே போன்று பொதுமக்கள் தங்களது இல்லங்களில் நடைபெறும் பல்வேறு சுபநிகழ்ச்சிகளை சமுதாய கூடத்தில் ரூ.2000 மிகக்குறைந்த வாடகையில் நடத்தி பயன்பெறலாம். மேலும் இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.செல்வராஜ், திரு.சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.பெரியசாமி, திரு.கிருஷ்ணன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**